# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 24/ந/2025
நாள்:. 08.04.2025

திருமதி. L. சங்கரி,
கீழப்புலியூர், தென்காசி மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர், ... எதிர்மனுதாரர்
தென்காசி நகராட்சி, தென்காசி மாவட்டம்.

தென்காசி மாவட்டம், கீழப்புலியூர், உச்சிமாகாளியம்மன் கோயில் முதல் தெரு, க.எண்.360/B1 என்ற முகவரியை சேர்ந்த திருமதி. L. சங்கரி என்பவரது 27.01.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2025 அன்று பெறப்பட்டு, 24 /ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், கீழப்புலியூர், உச்சிமாகாளியம்மன் கோயில் முதல் தெரு, க.எண்.360/B1 என்ற முகவரியை சேர்ந்த திருமதி. L. சங்கரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“நான் தென்காசி மாவட்டம், கீழப்புலியூர், உச்சிமாகாளியம்மன் கோயில் முதல் தெரு, க.எண்.360/B1 என்ற முகவரியில் அமைந்துள்ள மனையில் கடந்த 2018 ஆம் ஆண்டில் வீடு கட்டி கடந்த 6 வருடங்களாக தென்காசி நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி வகையறாக்களை முறையாக செலுத்தி குடிநீர் இணைப்பும் பெற்று குடியிருந்து வருகின்றேன்.

எனது வீட்டிற்கு மேற்குப்பக்கம் வரக்கூடிய தெருவின் ஆக்கிரமிப்பு தொடர்பாக, எனக்கும், எனது எதிர் மனைகளுக்கு சொந்தக்காரர்களான திரு. மாரியப்பன் மற்றும் அவரது சகோதரரான திரு. வேம்பு ஆகியோர்களுக்கும் எனது வீட்டிற்கு மேற்குப்பக்கம் உள்ள தெருவில் (பொது நடைபாதை மற்றும் வண்டிப்பாதையில்) திரு. மாரியப்பன் மற்றும் திரு. வேம்பு ஆகியோர் செய்துள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக இருந்து வந்த தாவாவில், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பின் உத்தரவு மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உத்தரவுகளின்படி நடத்தப்பட்ட

விசாரணையில், எனது தரப்பு ஆதாரங்களையும் மற்றும் வாதங்களையும் சிறிதும் கவனத்தில் கொள்ளாமல் நேரமின்மையை காரணம் காட்டி எனக்கு எந்தவிதமான வாய்ப்பும் அளிக்காமல் ஒருதலைபட்சமாக தென்காசி நகராட்சி ஆணையாளரால் அனுப்பப்பட்ட விசாரணை அறிக்கையுடன் எனது தரப்பு ஆதாரங்களையும் இணைத்து உயர்திரு. தென்காசி மாவட்ட ஆட்சியர் அவர்களை நேரடி விசாரணை செய்து மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றித்தர வேண்டி விண்ணப்பம் செய்திருந்தேன்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் கடித நகல் ஒ.மு. Colr/2421/2023/H1 நாள் 08.02.2023– ன்படி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் கடந்த 2023–ஆம் ஆண்டு நடைபெற்ற நேரடி விசாரணையில் பொது நடைபாதை ஆக்கிரமிப்பு உறுதி செய்யப்பட்டு CRPC 133 (152 BNSS) பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பை அகற்றிட வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டு 10.10.2024 அன்று வருவாய்க் கோட்டாட்சியர் அவர்களும் வட்டாட்சியர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்க (RDOTKS/3820/2023/A1) உத்தரவிட்டுப்பட்டடுள்ளனர்.

மேற்படி உத்தரவினை செயல்படுத்துவதை தாமதப் படுத்தும் விதமாக மேற்படி இருவரும் எனது வீட்டிற்கு வடக்குப் பக்கம் உள்ள எனது உறவினரின் வீட்டிற்கு மேற்குப் பக்கம் நேர் எதிராக 8 அடி அகலம் உள்ள பாதைக்கு மேற்கே உள்ள 12 செண்ட் மனையில் கதவு எண்.373/B-ல் குடியிருந்து வரும் திரு. B. சோமசுந்தரராஜன் என்பவரையும் இணைத்துக் கொண்டு எனது உறவினரின் வீட்டிற்கு மேற்குப் பக்கம் வரக்கூடிய 8 அடி அகலம் மற்றும் 72 அடி நீளம் உள்ள தெருவின் மத்திய பகுதியில் வரக்கூடிய ஒரு பகுதியை மூவருக்கு மட்டும் உள்ள பொதுப்பாதை என்று தென்காசி முதன்மை சார்பு நீதி மன்றத்தில் தேவையில்லாமல் என்னையும் இணைத்து எங்கள் இருவரின் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்கள். வழக்கு எண். O.S.No.1015/2024. வழக்கினை நாங்களும் முறையாக கடந்த 17.12.2024 அன்று எதிர் கொண்டுள்ளோம்.

எங்களது வீட்டிற்கு மேற்குப்பக்கம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆர்.சி.பள்ளிக்கூடம் காம்பவுண்டு சுவர் வரை வரக்கூடிய சுமார் 280 அடி நீளம் உள்ள பொது நடைபாதை மற்றும் வண்டிப்பாதையானது 8 அடி அகலம் உள்ள தெருவாகும் என்று ஏற்கனவே தென்காசி நகராட்சி ஆணையாளரின் 04.01.2023 தேதியிட்ட அறிவிப்பு ஆணை நக.எண்.2145/2021/எப்1–ல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தென்காசி நகராட்சி ஆணையரின் அறிவிப்பில் எனது மற்றும் எனது உறவினரின் வீட்டிற்கு மேற்குப் பக்கம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆர்.சி. பள்ளிக்கூடம் காம்பவுண்டு வரையிலும் சுமார் 280 அடி நீளம் மற்றும் 8 அடி அகலம் உள்ளது தெருவாகும் என்று தெளிவாகத் தெரிகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ள தெருவில் மேற்படி திரு. சோமசுந்தர்ராஜன் திரு.மாரியப்பன் மற்றும் திரு.வேம்பு ஆகியோருடன் இணைந்து கொண்டு, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள தெருவின் நடுப்பகுதியில் நீதிமன்றத்தை அவமதிப்பு செய்யும் விதமாகவும் நான் எனது வீட்டிற்கு கடந்த 6 வருடங்களாக எனது உறவினரின் வீட்டு வழியாக சென்று வந்து கொண்டிருந்த மேற்படி பாதையில் என்னையும் எனது உறவினரையும் மட்டும் செல்லவிடாமல் தடுக்கும் விதமாகவும், தெரு முனையில் மீண்டும் இரும்பு கேட் ஒன்றை அமைத்து தெருவை அடைத்து பூட்டு போட்டு பூட்டி வைத்துவிட்டார்கள்.

தற்போது 14.01.2025 முதல் திரு. சோமசுந்தர்ராஜன் திரு.மாரியப்பன் மற்றும் திரு.வேம்பு ஆகிய மூவர் மட்டும் பயன்படுத்தும் விதமாகவும் (என்னையும் எனது குடும்பத்தாரையும் புழுங்கவிடாமல் செய்யும் விதமாக) தெருவில் உள்ள அனைவரும் அவ்வப்போது கேட்டை திறந்து மூடி உபயோகப் படுத்தி வருகின்றார்கள். இது பார்ப்பதற்கு ஜாதியக் கொடுமைகள் நடப்பது போலவே உள்ளது என்பதை மிகுந்த மன வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது

தொடர்பாக நான் தென்காசி நகராட்சிக்கும், நகராட்சி மண்டல இயக்குநர் அவர்களுக்கும் பலமுறை நான் நேரடியாகவும் தபால் மூலமாகவும் விண்ணப்பித்தும், உயர்திரு. கோட்டாட்சியர் அவர்கள் அலுவலகத்திலிருந்து பலமுறை கடிதங்கள் அனுப்பப்பட்டும் எந்தவிதமான பதில் கடிதங்களும்அனுப்பாமலும் தென்காசி நகராட்சியினர் பணபலம் மற்றும் அரசியல் தலையீடு காரணமாகவும் ஒருதலைபட்சமாக நடந்து கொண்டு செவி சாய்க்காமலும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்காமலும் இருந்து வருகின்றனர் என்பதை மீண்டும் மிகுந்த மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிரவும் கடந்த 2019 ஆம் ஆண்டு திரு. சுப்ரமணியம் மற்றும் திரு. கந்தசாமி வகையறாக்களுக்கிடையே நடந்த வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஐயா திரு. ராஜாமாணிக்கம் அவர்கள் பட்டா நிலங்களில் வரக்கூடிய அனைத்து வண்டிப் பாதைகள் மற்றும் பொது நடைபாதைகள் அணைத்தும் அரசாங்கத்துக்கு சொந்தமானவைகள் என்று தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். எனவே, மேற்படி நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், தென்காசி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவிப்பு ஆணையின் படியும், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் வழக்கு தொடர்பான பாதையில் இது போன்ற சட்ட விரோத நடவடிக்கைகள் நடைபெறக்கூடாது என்பதின் அடிப்படையிலும் தெருவின் குறுக்காக சட்ட விரோதமாக எதிர் மனுதாரர்களால் தற்போது அமைக்கப்பட்டுள்ள இரும்பு கேட்டையும் வருவாய்க் கோட்டாட்சியர் அவர்களால் அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ள பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பினையும் சேர்த்து அகற்றி என்னையும் எனது குடும்பத்தாரையும் மற்றும் எனது உறவினரையும் மேற்படி பாதை வழியே சுதந்திரமாக சென்று வர வழிவகை ஏற்படுத்தி தருமாறு தென்காசி நகராட்சிக்கு உத்தரவிட வேண்டுமாய் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு மற்றும் தொடர்புடைய ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில், புகார் மனுதாரர் திருமதி, L. சங்கரி என்பவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் இப்பொருள் தொடர்பாக மாண்பமை தென்காசி முதன்மை சார்பு நீதி மன்றத்தில் திரு. சோமசுந்தர்ராஜன் திரு. வேம்பு மற்றும் திரு. மாரியப்பன் ஆகியோரால் தொடரப்பட்ட வழக்கு (வழக்கு எண்.O.S.No.1015/2024) நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquirieis Act 1962 or any matter pending before a Court.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 8–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. L. சங்கரி,
க.எண்.360/B1, உச்சிமாகாளியம்மன் கோயில் முதல் தெரு,
கீழப்புலியூர்,
தென்காசி மாவட்டம்.

2) ஆணையாளர்,
தென்காசி நகராட்சி,
தென்காசி மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

11/4/25
செயலாளர்